# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 மாசி 13 ஞாயிற்றுக்கிழமை (25.02.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 92


# போர் நிறுத்த ஒப்பந்தம் மாற்றம் எதுவுமே இன்றி தொடர்ந்து அமுலில் இருக்கும்

## அரசு அதனை முறித்துக்கொள்ளாது; திருத்தவும் மாட்டாது அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல சொல்கிறார்



கொழும்பு, பெப்ரவரி 25

போர்நிறுத்த ஒப்பந்தம், மாற்றம் எதுவும் இன்றித் தொடர்ந்து நடைமுறையில் இருக்கும். அதனை அரசாங்கம் முறித்துக்கொள்ளவும் மாட்டாது; அதில் திருத்தம் எதனையும் செய்துகொள்ளவும் மாட்டாது.

இவ்வாறு திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறார் பாதுகாப்பு விவகாரங்களுக்கான பேச்சாளரும் அமைச்சருமான ஹெகலிய ரம்புக்வெல.

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட போர்நிறுத்த ஒப்பந்தத்தின் ஐந்து ஆண்டுகள் பூர்த்தி குறித்துக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்ட தகவல்களைத் தெரிவித்தார்.

போர் நிறுத்த ஒப்பந்தத்தை அரசாங்கம் முறித்துக்கொள்ளப் போவதாகவும், அவ்வாறில்லையெனில் அதில் திருத்தம் செய்து கொள்ளப்போவதாகவும் அரசியல் வட்டாரங்களில் நிலவும் ஊகங்கள் குறித்து அமைச்சரிடம் வினவப்பட்டது.

போர்நிறுத்த ஒப்பந்தம் ஏற்கனவே அமைந்துள்ள வடிவத்திலேயே தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்படும். நாட்டின் அரசமைப்புக்கு இசைந்த வகையில் தனது பணிகளை முன்னெடுத்துச்செல்லும். நாட்டின் இறைமையையும் தேசிய ஒருமைப்பாட்டையும் பாதுகாப்பதற்கான முழு அதிகாரமும் எமது அரசமைப்பின் பிரகாரம் ஜனாதிபதியிடமே உண்டு.

நாட்டின் எந்தப் பகுதியிலாவது நாட்டின் இறையாண்மைக்கும் ஆட்புல ஒற்றுமைக்கும் பங்கம் ஏற்படும் பட்சத்தில் அரசமைப்புக்கு இணங்க அரசாங்கம் செயற்படும் - என்று அமைச்சர் மேலும் விளக்கமளித்தார்.

கொழும்பு ஆங்கில இதழ் ஒன்றுக்கு அளித்த செவ்வியில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கிழக்கிலும் வடக்கிலும் முன்னர் நடத்தப்பட்ட இராணுவத் தாக்குதல்கள், நிலத்தைக் கைப்பற்றுவதாக செய்யப்பட்டவை அல்ல. விடுதலைப் புலிகளின் பிடியில் சிக்கியுள்ள அப்பாவித் தமிழ் மக்களை விடுவிக்கும் ஒரே நோக்கத்துடனேயே அந்தத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

இந்த நாட்டின் நிலம் அரசுக்கே சொந்தமானது. தனது சொந்த நிலத்தைக் கைப்பற்றவேண்டிய தேவை எதுவும் அரசாங்கத்துக்கு இல்லை.

நாட்டின் சில பகுதிகள் பூகோள ரீதியாக விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள் என்று போர்நிறுத்த ஒப்பந்தத்தில் வரையறுக்கப்பட்டுள்ளபோதிலும் -

அந்தப் பிரதேசங்களில் வாழும் மக்களின் அடிப்படைத் தேவைகளும் உரிமைகளும் பறிக்கப்படும் பட்சத்தில் -

அந்தப் பிரதேசத்துக்குள் உத்தரவின்றிப் பிரவேசிப்பதற்கு அரசாங்கத்துக்கு அதிகாரம் உண்டு.

குறிப்பிட்ட மக்கள் விடுதலைப் புலிகளின் பிரதேசங்களில் வாழலாம். ஆயினும் அவர்கள் இலங்கைப் பிரசைகளே. இதன் அடிப்படையில் தனது சொந்த மக்களை விடுதலைப் புலிகளானாலும் சரி மாற்றான் சக்திகளாயினும் சரி துன்புறுத்தினால் அதனை அரசாங்கம் அசட்டை செய்ய முடியாது. அவ்வாறு நடப்பதற்கு நாம் ஒரு

(04ஆம் பக்கம் பார்க்க)

## புரிந்துணர்வு உடன்பாட்டைத் திருத்துமாறு அரசைக் கோருகிறது முஸ்லிம் காங்கிரஸ்

கொழும்பு, பெப்.25

அரசுக்கும் விடுத்லைப் புலிகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கையில்- யுத்த நிறுத்த உடன்படிக்கையில்- திருத்தம் செய்யப்பட வேண்டும் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசைக் கோரியுள்ளது.

அக்கட்சியின் பொதுச்செயலாளர் ஹசன் அலி இக்கோரிக்கையை விடுத்துள்ளார்.

இந்த உடன்படிக்கை தற்போதுள்ள வடிவத்தில் தொடர்ந்து நடைமுறையில் இருக்குமானால் இனச் சிக்கலுக்குத் தீர்வு காணமுடியாது. ஆகவே அந்த உடன்படிக்கை திருத்தப்பட வேண்டியது அவசியம்.

முஸ்லிம் மக்களுக்கு அந்தஸ்த்து கிடைக்கக் கூடிய வகையில், உடன்பாட்டை திருத்த அரசும் விடுதலைப் புலிகளும் முன்வர வேண்டும்.

சர்வதேச சமூகத்தின் பிரசன்னத்தில் இந்தத் திருத்தம் செய்யப்பட வேண்டும். சண்டையில் தமிழர்களும் சிங்களவர்களும் ஈடுபடுகின்றார்கள். இதில் சிக்கி முஸ்லிம் மக்கள் மரணமாகின்றார்கள். எனவே, முஸ்லிம் மக்களைப் பாதுகாக்கக் கூடிய வகையில் உடன்பாட்டில் திருத்தம் செய்யப்பட வேண்டும்- இப்படி அவர் மேலும் தெரிவித்தார். (அ-1)

## மகசீன் தமிழ் இளைஞர்கள் நீதிமன்றில் ஆஜர் செய்யப்படுவர்

### பிரதி நீதி அமைச்சர் வாக்குறுதி

கொழும்பு, பெப்.25

கொழும்பு மகசீன் சிறைச்சாலையில் உண்ணாவிரதம் மேற்கொள்ளும் இளைஞர்களை நீதிமன்றத்தில் ஆஜர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று பிரதி நீதி அமைச்சர் டிலான் பெரேரா உறுதியளித்துள்ளார்.

மேற்படி இளைஞர்கள் விடயம் குறித்து பிரதி அமைச்சர் பி. இராதாகிருஷ்ணன் தொடர்புகொண்டு பேச்சு நடத்தினார். அப்போதே மேற்கண்ட உறுதிமொழி அளிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

பிரதி அமைச்சர் இராதாகிருஷ்ணன் நேற்றுமுன்தினம் மகசீன் சிறைச்சாலைக்குச் சென்று உண்ணாவிரதமிருக்கும் இளைஞர்களைச் சந்தித்துப் பேசினார்.

இதேவேளை -

உண்ணாவிரதம் மேற்கொண்டுவரும் தமிழ் இளைஞர்களை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிவநாதன் கிஷோர் மற்றும் எஸ். கனகசபை ஆகிய இருவரும் நேற்றுக் சந்தித்துக் கலந்துரையாடினர்.

தடுத்துவைக்கப்பட்டுள்ள இளைஞர்கள் கடந்த 3 நாள்களாக உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

பயங்கரவாதத் தடைச் சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன்னர் இவர்கள் கைதுசெய்யப்பட்டு இதுவரை நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்படாமல் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (அ)

## இன்றைய ஊரடங்கு நேரம்

யாழ்ப்பாணம், பெப்.25

குடாநாட்டில் சகல பிரதேசங்களிலும் இன்று மாலை 6மணிக்கு நடைமுறைக்கு வரும் ஊரடங்குச் சட்டம் நாளை அதிகாலை 5மணிக்கு நீக்கப்படும் என்று பலாலி ஊடகத் தகவல் பிரிவு தெரிவித்தது. (அ-1)

## சக்திவாய்ந்த வெளியிணைப்பு இயந்திரங்கள் பயன்படுத்தத் தடை

கொழும்பு, பெப்.25

வடக்கு - கிழக்குக் கடலில் 15மற்றும் 25 குதிரை வலுக்கொண்ட வெளியிணைப்பு இயந்திரங்களை படகுகளில் பயன்படுத்துவதற்கு மீனவர்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

மீனவர்கள் 9.9 குதிரை வலுக்கொண்ட வெளியிணைப்பு இயந்திரங்களை மட்டுமே பயன்படுத்தமுடியும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. (அ-1-4)

## கும்புறுப்பிட்டியில் 3 முகாம்களைப் படையினர் தம்வசமாக்கியதாக அறிவிப்பு

திருகோணமலை, பெப்.25

திருகோணமலை நகரில் இருந்து 20 கிலோமீற்றர் தூரத்தில், கும்புறுப்பிட்டியில் அமைந்திருந்த விடுதலைப் புலிகளின் மூன்று முகாம்களைப் படையினர் தம்வசமாக்கியதாக மத்திய ஊடக தகவல் நிலையம் நேற்றுத் தெரிவித்தது.

ஆட்லறி மற்றும் மோட்டார்த் தாக்குதல்களை நடத்தித் கொண்டு படையினர் முன்னேறி வருகின்றனர் என்றும்-

கடந்த 72 மணிநேரத்தில் மூன்று முகாம்களைத் தமது கைவசப்படுத்தி கும்புறுப்பிட்டியைப் படையினர் மீட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (அ-1-4)

## ஜனாதிபதியுடன் 100 பேர் சீனா செல்கின்றனர் அவர்களில் 20 பேர் பிக்குமார்

கொழும்பு, பெப்.25

சீனாவுக்கு நாளை விஜயம் மேற்கொள்ளும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் 20 பிக்குகளும் செல்கின்றனர்.

இன்றிரவு கட்டுநாயக்காவில் இருந்து புறப்படும் ஜனாதிபதியுடன் அமைச்சர்கள், அதிகாரிகள் என்று நூறு பேர் செல்கின்றனர். (அ-1)

## புலிகளின் நிலைகள் மீது நேற்று வவுனியாவிலிருந்து ஷெல் தாக்குதல்

வவுனியா, பெப்.25

வவுனியா நகரில் உள்ள படை முகாமில் இருந்து புளியங்குளத்தில் உள்ள விடுதலைப் புலிகளின் முன்னரங்க நிலை கள் மீது நேற்றுப் பிற்பகல் 3 மணி முதல் ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

படையினரின் நிலைகளை நோக்கி நேற்று ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது என்றும் -

படையினரும் பதிலுக்கு ஷெல் தாக்குதல் நடத்தினர் என்றும் - படைத் தரப்புத் தெரிவித்தது.

இந்தத் தாக்குதல் அரைமணி நேரம் தொடர்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, நேற்றுப் பிற்பகல் 4 மணிக்கு ஓமந்தை சோதனை நிலையம் ஊடான போக்குவரத்துக்களும் படையினரால் நிறுத்தப்பட்டிருந்தன. (அ-1-4)

## சர்வகட்சி மாநாட்டுக்கு சு.க., ஹெல உறுமய இருவாரங்களில் யோசனைகளைச் சமர்ப்பிக்கும்

கொழும்பு, பெப்.25

இனப்பிரச்சினைத் தீர்வுக்காக, சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவுக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஜாதிக ஹெலஉறுமயவும் தமது யோசனைகளை இன்னும் இரு வாரங்களுக்குள் சமர்ப்பிக்க உள்ளன.

சுதந்திரக்கட்சியின் பிரதிநிதிகளில் பெரும்பான்மையானவர்கள் அமைச்சர்கள். அவர்கள் கடும் வேலைப்பளு காரணமாக யோசனைகளை இன்னும் தயாரிக்கவில்லை. அடுத்த இரு வாரங்களில் யோசனையை அவர்கள் சமர்ப்பிப்பர் என்று எதிர்பார்க்கப்படுவதாக குழுவின் தலைவரும் அமைச்சருமான திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் யோசனைகள் கட்சியின் மத்திய குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்டு பின் சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவுக்கு கையளிக்கப்படும் என்று அக்கட்சி சார்பிலான பிரதிநிதியான அமைச்சர் பேராசிரியர் விஸ்வவர்ணபால தெரிவித்தார்.

இதேவேளை -

ஜாதிக ஹெல உறுமயவின் பிரதிநிதியான உதய கமன்பில கருத்து வெளியிடுகையில், திஸ்ஸ விதாரணவேயின் யோசனையை எமது கட்சி நிராகரித்துவிட்டது. எமது கட்சியின் யோசனை இன்னும் இரு வாரங்களுக்குள் சமர்ப்பிக்கப்படும் - என்றார்.

அதேவேளை -

இனப்பிரச்சினைத் தீர்வுக்காக சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவுக்கு தாம் முன்வைத்த ஆலோசனைகளுக்கு ஸ்ரீல.சு. கட்சியும் திருத்தங்களை முன்வைக்கும்.

(04ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சேவை நலன் பாராட்டும் பிறந்த தின வாழ்த்தும்



எமது கல்லூரியில் 17 வருடங்கள் நல்லாசிரியையாகப் பணிபுரிந்து 24.02.2007 அன்று ஓய்வுபெற்ற எங்கள் சக ஆசிரியை

**திருமதி**

**பாரதாமணி - மகாதேவா**

(B.A.(Geo.), B.Phill(Hons), Dip. in Edu.)

அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

சேவைவிபரம்

**01.11.1976 - 19.09.1989**

(யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை, பருத்தித்துறை)

**20.09.1989 - 24.02.2007**

(யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

சமூகக்கல்வியுடன் சமய அறிவையும் ஊட்டி
ஆத்மசிந்தையுமாய் நாளும் உயர்பணிபுரிந்த
உன்னதமான நன்னாளை எண்ணி - என்றும்
நலம் பெற இனிது வாழ்த்துகின்றோம்.

ஆசிரிய சகோதரத்துவம்,
யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

(58411)

---

**UNIVERSITY OF JAFFNA, SRI LANKA**
**RECOMMENCEMENT OF CERTIFICATE COURSE IN ENGLISH FOR SCHOOL LEAVERS**

The Lectures for the above will recommence on the 3rd of March at the English Language Teaching Centre, University of Jaffna.

Registrar
2007.02.23

(அ-52092)

---

## விற்பனைக்கு

எமது சங்கத்தில் வெற்றுப்பைகள், வெற்றுச்சாக்குகள் விற்பனைக்கு உண்டு. இவற்றினை சங்கத்தின் தலைமைக் காரியாலயத்தில் உள்ள களஞ்சியத்தில் பார்வையிட்டு, கூறுவிலையினை சங்கத்தில் சமர்ப்பிக்கவும். முடிவு திகதி 28.02.2007 புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு முன் சமர்ப்பிக்கவும்.

தலைவர்,
தென்மராட்சி மேற்கு ப.நோ.கூ.சங்கம்,
மானிப்பாய் வீதி, கைதடி.

(அ-52093)

---

## 46ஆம் நாள் நினைவஞ்சலியும் 46 ஆவது பிறந்தநாள் நினைவும்

| அன்னை மடியில் | | அகிலமய அழிப்பில் |
|---|---|---|
| 26 ★ 02 ★ 1961 |  | 12 ★ 01 ★ 2007 |

**அமரர் வெள்ளையன் பிரேமச்சந்திரன்**

(கிராம அலுவலர், J/383 - தொண்டைமானாறு தெற்கு)

ஊருக்கெல்லாம் சேவை செய்தாய்
உமக்கோ நாம் பாடை செய்தோம்
பாருக்குள் நல்லவர்க்கு
பாதிவழி விதியாச்சோ!

கடந்த 12.01.2007 அன்று அமரத்துவமடைந்த எமது குலக்கொழுந்தின் அந்தியேட்டிக்கிரியைகள் நாளை (26.02.2007) திங்கட்கிழமை காலை 7 மணிக்கு நடைபெறவுள்ளன. இந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் வேண்டிக்கொள்கின்றோம்.

அரசடி,
தொண்டைமானாறு. (58413) - குடும்பத்தினர்.

---

## 2ஆம் ஆண்டு வீட்டுக்கிருத்திய அழைப்பு

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 31 ★ 09 ★ 1964 |  | 17 ★ 02 ★ 2005 |

17.02.2005 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவி

**அமரர் விக்னேஸ்வரன் பற்குணலட்சுமி (ரஞ்சா)**

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (25.02.2007) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால், அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

பாடசாலை வீதி,
சங்கானை. (58285) - குடும்பத்தினர்.

---

ஆவரங்கால்

## கன்னாரை அம்மன் தேவஸ்தானம்

(இராஜராஜேஸ்வரி அம்மன்)

மேற்படி தேவஸ்தானத்தில் 01.02.2007 வியாழக்கிழமை அன்று க.சிவசுப்பிரமணியம் தலைமையில் பொதுக்கூட்டம் நடத்தப்பட்டது. 2007 இற்கான நிர்வாக சபை விவரம் வருமாறு:-

1) தலைவர்:- க.செல்லத்துரை
2) உபதலைவர்:- க.பாலசுப்பிரமணியம்
3) செயலாளர்:- இ.இராகுலன்
4) உபசெயலாளர்:- வ.சிவானந்தராசா
5) பொருளாளர்:- வ.வேலாயுதம்

**நிர்வாக உறுப்பினர்கள்**

1) இ.கந்தையா
2) அ.கதிரவேலு
3) ஆ.தியாகராசா
4) பே.பிரபா
5) க.சுரேஸ்குமார்
6) க.மோகனதாஸ்
7) க.தங்கராசா

(அ/52094)

செயலாளர்.

---

## வேலையற்ற பட்டதாரிகளுக்கான கலந்துரையாடல்

நாளை (26.02.2007) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். கல்வி வலயத்திற்கு அருகில், 2004, 2005 இல் பட்டம்பெற்று வெளியேறிய பட்டதாரிகளுக்கான கலந்துரையாடலும் பதிவும் இடம்பெறவுள்ளன.

வேலையற்ற பட்டதாரிகள் சங்கம்.

---

## வீடு வாடகைக்கு

ஊரெழுவில் வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு: மகேந்திரராஜா கடை,
பலாலி வீதி, ஊரெழு.

---

## கார் விற்பனைக்கு

டாக்டர் ஒருவரின் தனிப்பாவனையில் உள்ள புத்தம் புதிய Maruti Wagon - R கார் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 'ராஜஸ்தான்', சிவராஜா அவெனியூ, தபால்பெட்டிச் சந்தி, பலாலி வீதி, திருநெல்வேலி. [Music world முன்பாக]

---

## விற்பனைக்கு

Washing Machine, Fridge, Kitchen unit, மேசைகள், NPGO XXXX Hero Honda (passion) Motor bike என்பன விற்பனைக்குண்டு.
தொடர்பு: 'ராஜஸ்தான்', சிவராஜா அவெனியூ, தபால்பெட்டிச் சந்தி, திருநெல்வேலி. [Music world முன்பாக]

---

## விற்பனைக்கு

கண்டிக்குளி, விதானையார் வீதியில் 3 பரப்புக் காணியில், 8 அறைகள், 2 சமையலறைகள், 2 கராஜ், 2 கோல் என்பவற்றுடன் நவீன வசதிகளுடன் அமைந்த மாடிவீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு:- S.S.நாதன்,
இல. 16/3, விதானையார் வீதி,
கண்டிக்குளி, யாழ்ப்பாணம். தொ.பே. 0776146434.

---

## விற்பனைக்கு

Monitor, Casing ஏனைய கணனி உபகரணங்கள் விற்பனைக்குண்டு.
24.02, 25.02.2007 ஆம் திகதிகளில் பார்வையிடலாம்
தொடர்பு: 44/3A, மணல்தறை லேன், கந்தர்மடம்.

---


## இந்தியாவில் கல்வி கற்கும் வாய்ப்பு
## பிருந்தாவன் கல்லூரி

பெங்களூர் பல்கலைக் கழகத்துடன் இணைந்தது

கல்வி நெறிகள்
B.Sc.
B.B.M.
B.C.A.
B.Com.

அரையாண்டு கட்டணம் ... 
பதிவுகள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றன

Company Secretarial Services(Pvt.)Ltd.
285C-1/1 Stanley Tillakaratne Mawatha, Nugegoda.
மேலதிக விபரங்களுக்கு தொடர்புகொள்ளவும்
தொலைபேசி இலக்கம் - 0777 317043


---


## தினசரி விமானசேவை

கொழும்பு - யாழ்.
யாழ். - கொழும்பு

DAYA AVIATION நிறுவனத்தினால் நான்கு பேர் பயணிக்கக்கூடிய இரு வழிப்பாதை தினசரி சிறுவிமான சேவை உத்தரவாதத்துடன் நடத்தப்படுகின்றது. ஒரு வழிப்பாதைக்கான கட்டணம் ரூபா 30,000/= உடனடிப்பயணத்துக்கு தொடர்பு கொள்ளவும்.

தொ.பே.: 0114969116/ 0114542190
0114542360


---

## படிவம்

மாணவ தாதிமார் போட்டிப் பரீட்சை 2006 (II) படிவம் உண்டு.
முடிவுத் திகதி 23.03.2007

Bharathy Pathippakam,
430, K.K.S. Road, Jaffna.

---

## தவறிவிட்டது

இல.40, அரசடி வீதி, 5ஆம் ஒழுங்கை, நல்லூரைச் சேர்ந்த சின்னத்தம்பி மகேந்திரராசா என்பவருடைய தே.அ.அட்டை [இல. 632790562V] பொம்மைவெளிக்கும் ஓட்டுமடம் சந்திக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் இல.651, மானிப்பாய் வீதி, ஓட்டுமடத்தில் ஒப்படைத்துதவவும்.

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



**அமரர் நடராசா பாலேந்திரா**

கடந்த 26.01.2007 ஆம் திகதி இறைபதமெய்திய எனது சகோதரர் நடராசா பாலேந்திரா அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (25.02.2007) ஞாயிற்றுக்கிழமை எனது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலம் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறேன்.

மணியகாரன் வீதி,
கொக்குவில் கிழக்கு.

இராஜேந்திரா,
றோகன் ( Rogan)

---

## சபிண்டீகரண அழைப்பு



இறையடி சேர்ந்த
எமது குடும்பத் தலைவர்
அமரர்

**கைலாசபிள்ளை கனகலிங்கம்**

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 09.06.1952 | 26.01.2007 |

அன்னாரின் சபிண்டீகரண கிரியைகள் இன்று (25.02.2007) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

101, முஸ்லிம் கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.: 6153647 (58479) - குடும்பத்தினர்.

---

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 25 ★ 01 ★ 1956 |  | 12 ★ 03 ★ 2003 |

**அமரர் கதிரிப்பிள்ளை சிறிஸ்கந்தராசா (ஆனந்தன்)**

**திதி: மாசி பூர்வபக்க நவமி (25.02.2007)**

அன்பிற்கே தந்தையான நீங்கள்
ஆழ்ந்த தூக்கம் கொண்டதேன்?
இயற்கையின் நியதி
தெய்வமான உங்களை யெண்ணி
தேம்பி நாம் அழுகின்றோம்!

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

பத்தாவத்தை,
இளவாலை வடக்கு.

நீங்கா நினைவுடன்:
பெற்றோர், மனைவி, பிள்ளைகள்,
மருமகன், பேர்த்தி.

(58293)

---

## மரண அறிவித்தல்

### பெரியதம்பி வேலுப்பிள்ளை



இணுவில் மேற்கைப்-பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பெரியதம்பி வேலுப்பிள்ளை 24.02.2007 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஜெயமணியின் அன்புக் கணவரும் ஞானேஸ்வரி (டென்மார்க்), அனுசூசை (கனடா), கங்காதரன் (ஆசிரியர் - யாழ். இளவாலை கன்னியர்மடம் மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் விக்னேஸ்வரன், திருச்செல்வம், சுதாநந்தினி ஆகியோரின் மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.02.2007) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தனக்கிரியைக்காகக் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கே.கே.எஸ். வீதி,
இணுவில் மேற்கு, இணுவில். (58434)

தகவல்
வே. கங்காதரன் (ஆசிரியர்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொ.பே., 222 3837, 222 9933 தொ.ந.: 222 9944

## தேசிய இனங்களின் உரிமைப்போர்: இரட்டை வேடம் போடுகிறார் மஹிந்தர்!

எண்பதுகளின் பிற்பகுதியிலும் தொண்ணூறுகளின் ஆரம்பத்திலும் தென்னிலங்கையில் அரச அடக்கு முறையினால் அப்பாவி மக்களின் அடிப்படை உரிமைகள் பறிக்கப்பட்டபோது அதற்கு எதிராகத் துணிந்து குரல் கொடுத்தவர் அன்றைய நாடாளுமன்ற உறுப்பினரும் இன்றைய ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ஷ. இதனால் மனித உரிமை வாதியாகத் தெற்கில் பெரிதும் மதிக்கப்பட்டவர். ஆனால் இன்று அவரது முழு அதிகாரத்தின் கீழ் அமைந்த அரசில்தான் அரச பயங்கரவாதம் மிக மோசமான மனித உரிமை மீறல்களில் ஈடுபடுகின்றது.

தாம் எதிர்க்கட்சித் தரப்பில் இருந்த போது, உலகளாவிய ரீதியில் அடக்கப்பட்ட மக்களுக்காக - ஒடுக்கப்பட்ட இனங்களுக்காக - குரல் எழுப்பவும் மஹிந்தர் தவறவில்லை. குறிப்பாக விடுதலைக்காகப் போராடும் பலஸ்தீன மக்களுக்காக தமது முழு ஆதரவை வழங்குபவர் போல காட்டிக் கொண்டார் அவர். பலஸ்தீன் - இலங்கை நட்புறவுச் சங்கத்தின் தலைவராகக் கூட இருந்தவர்.

இப்போது கூட, தமது பிரதான அமைச்சராக இருந்த மங்கள சமரவீரவுடன் முரண்பட்டு, அமைச்சரவையிலிருந்து சமரவீரவைத் தூக்கியெறிந்த போதும், அவர் மீது ஜனாதிபதி மஹிந்தர் தரப்பினர் சுட்டிக்காட்டிய முக்கிய குற்றச்சாட்டுகளில் ஒன்று பாலஸ்தீனம் பற்றியதே. பாலஸ்தீனத்தில் இஸ்ரேல் ஆக்கிரமிப்புத் தரப்புப் புரிந்துவரும் அத்துமீறல் நடவடிக்கைகளையும், அடாவடித் தாக்குதல்களையும் கண்டித்து பிரேரணை ஒன்று ஐ.நா. சபைக்கு வந்தது. அந்தப் பிரேரணை மீதான வாக்கெடுப்பின்போது ஐ.நாவுக்கான இலங்கைப் பிரதிநிதி சபையில் இருக்கவில்லை. அந்தப் பிரேரணைக்கு ஆதரவு தெரிவித்துப் பல நாடுகளும் வாக்களிப்பதை அமெரிக்கா விரும்பவில்லை என்று கூறப்படுகின்றது. அச்சமயம் இலங்கையின் வெளிவிவகார அமைச்சராக இருந்த மங்கள சமரவீர, அமெரிக்காவின் அழுத்தத்திற்குப் பணிந்து ஐ.நாவுக்கான இலங்கைத் தூதரை வாக்கெடுப்புச் சமயம் சபையில் இருக்காமல் செய்துவிட்டார் என்றும், அதன் மூலம் பலஸ்தீன மக்களுக்கு அவர் துரோகம் இழைத்ததோடு, அதுவரை அந்த மக்களுக்காகக் குரல் எழுப்பிவந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் நற்பெயரையும் இந்த நடவடிக்கையின் மூலம் மங்கள சமரவீர கெடுத்துவிட்டார் என்றும் மஹிந்தர் தரப்பில் குற்றம் சுமத்தப்படுகின்றது.

ஆனால், இலங்கையில் தேசிய விடுதலைக்காகப் போராடும் ஈழத்தமிழர்களை அரச பயங்கரவாதம் மூலம் - ஆயுத முனையில் - அடக்கி, ஒடுக்க முயலும் ஜனாதிபதி மஹிந்தர், சர்வதேச ரீதியில் தேசிய விடுதலைக்காகப் போராடும் பாலஸ்தீனம் போன்றவற்றின் போராளிகளுக்காகக் குரல் எழுப்புபவர் போலத் தம்மைக் காட்டிக்கொள்வது 'சுத்தப் பம்மாத்து' என்று சுட்டிக்காட்டுகின்றார், கொழும்பு, ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் அரசியல், விஞ்ஞான ஆய்வுப்பிரிவின் சிரேஷ்ட விரிவுரையாளர் டெரன்ஸ் புரசிங்க.

அவர் குறிப்பிடும் சில விடயங்கள் இங்கு நோக்கற்பாலவை.

*"உலக சரித்திரத்தைப் பின்னோக்கிப் பார்த்தால், பல்வேறு காலகட்டங்களில் தேசிய விடுதலைப் போராட்டங்களை முன்னெடுத்த சுதந்திரப் போராட்ட அமைப்புகளில் வன்முறை வடிவிலான ஆயுதக் கலாசாரம் ஒரு முக்கிய கருவியாகப் பயன்படுத்தப்பட்டதை நாம் காணலாம். அத்தகைய வழியை நாடுவது இயற்கையானது. தவிர்க்கமுடியாதது. தீவிரவாதம், ஆக சிறுபான்மையினரால் மட்டும் பின்பற்றப்படுவது என அர்த்தம் கொள்வதும் தவறானது. பாதிப்புற்ற சமூகங்கள் மத்தியில் தலைதூக்கும் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க அரச நிர்வாகம் தவறும் பட்சத்தில், அதற்கு எதிராக வன்முறை வெடிக்கின்றது என்பதை எவரும் மறுக்கமுடியாது. அத்தகைய வன்முறைகளைக் கட்டுப்படுத்துவதற்காக அரசுத் தரப்புகளால் கட்டவிழ்த்துவிடப்படும் அராஜகங்களும் வன்முறைகளாகவே கருதப்பட வேண்டும். அவற்றையும் நியாயப்படுத்திவிட முடியாது.*

*"உலகின் பல்வேறு நாடுகளில் தலைதூக்கிய பெரும்பாலான தேசிய விடுதலைப் போராட்டங்கள் இறுதியில் ஆயுதம் ஏந்திய போராட்டங்களாகவே மாற்றமடைந்தன. வியட்நாம் தேசியப் போராட்டம், சீனப் புரட்சி, அயர்லாந்துப் பிரச்சினை போன்றவை இதற்கு நல்ல உதாரணங்களாகும்.*

*"பலஸ்தீன விடுதலைப் போரட்டமும் இதுவரை பல ஆயிரம் உயிர்களைக் காவுகொண்டுள்ளது. ஆனால், அந்த விடுதலைப் போராட்ட அமைப்புக்குச் சார்பாகக் குரல் கொடுத்துவரும் தென்னிலங்கை அரசுக்கு விடுதலைப் புலிகளின் போராட்டம் வேப்பம் காயாகக் கசக்கின்றது. புலிகளும் பாலஸ்தீனர்களும் தமது விடுதலைப் போராட்டங்களைத் தத்தமது தேசியங்களின் பெயராலேயே - அதன் விடுதலைக்காகவே - தாங்கள் முன்னெடுக்கின்றார்கள் என்று கூறுகின்றனர். அந்தத் தேசியத் தனத்திற்கு எதிராகச் செயற்படும் தரப்புகள் - அந்தத் தேசியம் பற்றிய நிலைப்பாட்டை ஏற்காத தரப்புகள் - அந்த விடுதலைப் போராட்ட அமைப்புகளுக்கு எதிரான தரப்புகளே. அந்த வகையில் தமது இலட்சியத்திற்கு எதிராக இருக்கும் களைகளை அகற்றிவிடுவது அந்தப் போராட்ட அமைப்புகளின் போராட்ட தர்மமாகவும், நியாயமாகவும் அமைகின்றது. அத்தகைய போராட்ட அமைப்புகளின் சுபாவமும் அதுவேயாகும்"* - என்று சுட்டிக்காட்டுகின்றார் விரிவுரையாளர் புரசிங்க.

ஒரே இலட்சியத்திற்காக, ஒரே இலக்குக்காக, ஒரே மார்க்கத்தில் போராடிவருகின்றனர் பலஸ்தீனியர்களும் ஈழத்தமிழர்களும். பலஸ்தீனியர் விடயத்தில் அவர்களுக்கு ஆதரவானவர்களாகத் தம்மை உலகுக்குக் காட்டி நடிப்பவர்கள், மறுபுறத்தில் ஈழத் தமிழர்களுக்கு எதிரிகளாக நடந்துகொள்வதும் ஈழத்தமிழரின் போராட்டத்தை அரசு பயங்கரவாதம் மூலம் நசுக்குவதில் மும்முரமாக நிற்பதும் அவர்களின் முழு இரட்டைவேடத்தை அம்பலப்படுத்துகின்றன.

இவ்விடயத்தில் 'ஒரு கண்ணில் வெண்ணெய்; மறுகண்ணில் சுண்ணாம்பு' என்பதுபோல செயற்படுகின்றார் ஜனாதிபதி மஹிந்தர். அது இன்று உலகுக்கு முழு அளவில் அம்பலமாகிவருகின்றது.

ஒகஸ்ட் மாதத்தின் பின் முதல்முறையாக

# அரச நிறுவனங்களுக்குத் தேவையான பொருள்கள் கப்பல் மூலம் எடுத்துவரப்பட்டுள்ளன

யாழ்ப்பாணம், பெப்.25

குடாநாட்டில் இயங்கும் அரசாங்கத் திணைக்களங்களுக்கும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும் தேவையான காகிதாதிகள் மற்றும் உபரணங்கள் கப்பல் மூலம் எடுத்துவரப்பட்டுள்ளன.

கடந்த ஒகஸ்ட் மாதம் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக, உணவுப் பொருள்கள் மட்டுமே கப்பல் மூலம் எடுத்துவரப்பட்டன.

தற்போது முதல்முறையாக அரச திணைக்களங்கள், அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான பொருள்கள் கப்பல் மூலம் எடுத்து வரப்பட்டுள்ளன.

காங்கேசன்துறைக்கு வந்துள்ள 'இந்துருவலி' என்ற கப்பலில் இந்தப் பொருள்கள் வந்து சேர்ந்துள்ளன.

இதுவரைகாலமும் அரச திணைக்களங்கள், அரச சார்பற்ற நிறுவனங்களுக்குத் தேவையான காகிதாதிகள் மற்றும் அலுவலகப் பொருள்கள் எடுத்துவர அனுமதி வழங்கப்படாததால் அவற்றின் பணிகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தன என்று சம்பந்தப்பட்ட தரப்புகள் தெரிவித்தன.

வங்கிகள், தபாலகங்கள், பல்கலைக்கழகம் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்குத் தேவையான பொருள்கள் கப்பல் மூலம் எடுத்து வரப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது. (அ-1-203)

## பல்கலை. அனுமதியில் பாதிக்கப்பட்டவர்களின் கலந்துரையாடல் நாளை

யாழ்ப்பாணம்,பெப்.25

பல்கலைக்கழக அனுமதியில் பாதிக்கப்பட்ட மருத்துவத்துறை,பொறியியல்துறை மாணவர்களுக்கான கலந்துரையாடல் நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் சயன்ஸ் ஹோலில் நடைபெறவுள்ளது.

மருத்துவத்துறையில் 50 தொடக்கம் 70 இற்கும் பொறியியல் துறையில் 58 தொடக்கம் 68 இற்கும் இடைப்பட்ட மாவட்ட நிலையைப் பெற்ற மாணவர்களை இதில் தவறாது கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்ட மாணவர்களின் விவரங்களும் மகஜருக்கான கையொப்பங்களும் அங்கு வைத்துப் பெறப்படும். (1-203)

## பஸ்களுக்குத் தேவையான உதிரிப்பாகங்கள் வந்து சேர்ந்தன

### சேவைகள் நிறுத்தப்படும் அபாயம் நீங்கியது

யாழ்ப்பாணம்,பெப்.25

வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்குத் தேவையான ரயர்கள் மற்றும் உதிர்ப்பாகங்கள் கப்பல் மூலம் எடுத்துவரப்பட்டுள்ளன.

காங்கேசன்துறைக்கு நேற்று வந்து சேர்ந்துள்ள 'இந்துருவலி' என்ற கப்பலில் இவை எடுத்து வரப்பட்டுள்ளன.

சேவையில் ஈடுபட்டுள்ள பஸ்களுக்குத் தேவையான உதிரிப்பாகங்கள் மற்றும் உபகரணங்கள் வந்து சேராவிட்டால் இம்மாத இறுதியுடன் பஸ்சேவைகள் யாவும் நிறுத்தப்படும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது என போக்குவரத்துச் சபையின் வடபிராந்திய முகாமையாளர் முன்னர் அபாய அறிவிப்பு விடுத்திருந்தார்.

இது தொடர்பாக யாழ்.அரச அதிபர் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு எடுத்த நடவடிக்கையின் பயனாக, பஸ்களுக்குத் தேவையான ரயர்கள் மற்றும் உதிரிப்பாகங்கள், என்ஜின் ஒயில் ஆகியன கப்பல் மூலம் எடுத்து வரப்பட்டுள்ளன. (1-203)

## குழந்தைகளின் உணவு வகைகளுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது

யாழ்ப்பாணம்,பெப்.25

குழந்தைகளுக்குத் தேவையான உணவுப்பொருள்கள், பால்மா வகைகள், வாசனைப் பொருள்கள் ஆகியவற்றுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இந்தப் பொருள்கள் கறுப்புச் சந்தையில் அதிகூடிய விலைக்கு விற்பனை செய்யப்படுவதால் இவற்றைப் பெறமுடியாமல் தாய்மார்கள் சிரமப்படுவதாகக் கூறப்படுகிறது.

குழந்தைகளுக்குத் தேவையான 'கோல்டன் கவ்', 'சொலக்' ஆகிய பிஸ்கட் வகைகள் மற்றும் பால்மா வகைகள், வாசனைப் பொருள்களான 'பேபி பவுடர்', 'பேபி கொலோன்', மருந்து வகைகளான 'கிறேப் வாட்டர்' ஆகியவற்றைக் குடாநாட்டில் உள்ள மருந்தகங்களில் பெற்றுக் கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அவற்றுக்குக் கடும் தட்டுப்பாடு நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்.செயலகத்தால் குடாநாட்டுக்கு கப்பல் மூலம் எடுத்து வரப்பட்ட அத்தியாவசியப் பொருள்களில் குழந்தைகளுக்கான பால்மா வகைகள், பிஸ்கட் வகைகள் என்பனவும் அடங்கியிருந்தன. அவை ப.நோ.கூ. சங்கங்களுக்கு வழங்கப்பட்டு குழந்தைகளுக்கான அட்டைகளை வைத்திருப்பவர்களுக்கும், வைத்தியர்களின் சிபார்சுக் கடிதம் பெற்வர்களுக்கும் வழங்கப்பட்டு வந்தன.

ஆயினும் தற்போது ப.நோ.கூ.சங்கங்களிலும் இந்தப் பொருள்கள் அனைத்தும் முடிவடைந்துவிட்டதாகச் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

குழந்தைகளுக்குத் தேவையான இந்தப் பொருள்களைப் பெறுவதற்கு அலைய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் யாழ். நகரப் பகுதியில் உள்ள நடைபாதை வியாபாரிகளிடம் இந்தப் பொருள்களைப் பன்மடங்கு அதிகரித்த விலையிலேயே பெற வேண்டிய இக்கட்டான நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தாய்மார்கள் முறைப்படுகின்றனர்.(அ-8)

## சென்.ஜோன்ஸ் படையின் இரவுநேர அம்புலன்ஸ் சேவை

யாழ்ப்பாணம்,பெப்.25

சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையினரின் இரவு நேர அம்புலன்ஸ் சேவை தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றது.

இரவுநேர சேவை தேவையானோர் 2225599 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

பகல் வேளைகளில் 2223166 எனும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (1-203)

## யாழ்.நகர வர்த்தக நிலையங்களில் நீதிவான் தலைமையில் திடீர் பாய்ச்சல்

யாழ்ப்பாணம், பெப்.25

யாழ்.நகரப் பகுதியில் உள்ள மூன்று வர்த்தக நிலையங்களுக்கு யாழ்.நீதிவான் இ.த.விக்னராஜா தலைமையிலான குழு நேற்று திடீர் சோதனைகளை மேற்கொண்டது.

அரச அதிபரால் நிர்ணயிக்கப்பட்ட விலைகளில் பொருள்கள் விற்பனை செய்யப்படுகின்றனவா என்பதைக் கண்டறியவே இத்திடீர் பாய்ச்சல் மேற்கொள்ளப்பட்டது.

மூன்று வர்த்தக நிலையங்களில் மேற்கொள்ளப்பட்ட இச் சோதனை நடவடிக்கைகளின் போது, பொருள்களுக்குப் பற்றுச்சீட்டு வழங்கப்படாமை, விலைப்பட்டியல் பார்வைக்கு வைக்கப்படாமை என்பன கண்டறியப்பட்டன.

பிரஸ்தாப வர்த்தக நிறுவன உரிமையாளர்களை நாளை நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு நீதிவான் உத்தரவிட்டார். (அ-1)

## உப்பாறுத் திட்டத்தைச் செயற்படுத்த 'நோராட்' 100 மில்லியன் ரூபா வழங்கும்

யாழ்ப்பாணம்,பெப்.25

கைதடி - நாவற்குழி உப்பாறுத் திட்டத்தை செயற்படுத்துவதற்குத் தேவைப் பணத்தில் ஒரு பகுதியான நூறு மில்லியன் ரூபாவை வழங்குவதற்கு நோர்வேயின் அரசசார்பற்ற நிறுவனமான 'நோராட்' இணங்கியுள்ளது.

இந்தகவலை யாழ். அரச அதிபர் கே.கணேஷ் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் தேசநிர்மாண தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சு அலுவலகத்தில் கூட்டம் ஒன்று இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் உப்பாறுத் திட்டத்திற்குத் தேவையான நிதியில் ஒரு பகுதியான 100 மில்லியன் ரூபாவை வழங்குவதற்கு 'நோராட்' இணக்கம் தெரிவித்தது.

மழைகாலத்தில் கிடைக்கும் நன்னீர் கடல் நீருடன் கலக்காமல் அணை கட்டுவதற்கென உருவாக்கப் பட்ட இத்திட்டம் நிதி உதவி இன்றி நீண்ட காலமாகத் தடைப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-1)

### நாளை

மாசி- 14
திங்கட்கிழமை
26.02.2007
திதி: தசமி
பின்னிரவு : 03.11
நட்சத்திரம் : மிருகசீரிடம்
பிற்பகல் : 02.15
சுபநேரம் : 12.29 - 01.59
ராகுகாலம் : 07.59 - 02.29

## குரக்கன் செய்கை அறுவடை விழா

யாழ்ப்பாணம்,பெப்.25

உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கில் ஐ.நா. அபிவிருத்தித்திட்ட நிறுவனத்தின் அனுசரணையுடன் கீரிமலை விவசாயப் போதனாசிரியர் பிரிவில் விவசாயத் திணைக்களம் குரக்கன் செய்கை ஊக்குவிப்புத் திட்டத்தை நடைமுறைப் படுத்தி வருகின்றது.

இத்திட்டத்தின் கீழ் விளைவிக்கப்பட்ட குரக்கன் செய் கையை அறுவடைசெய்யும் வயல் விழா நாளை மறுதினம் முற்பகல் 10 மணிக்கு அளவெட்டி மேற்கு சி.வைத்தியநாதன் தோட்டத்தில் நடைபெறவுள்ளது.(1-202)

### குடாநாட்டின் டிச் செய்திகள் - யாழ்ப்பாணம்

## உலக உணவுத் திட்ட பயனாளிகளுக்கு பொருள்கள்

யாழ்ப்பாணம்,பெப்.25

கடந்த ஆண்டில் உலக உணவுத் திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட பணிகள் மற்றும் பயிற்சிக்கான உணவு ஆகிய செயல்திட்டங்களுக்கான உணவுப் பொருள்கள் அனைத்தும் சம்பந்தப்பட்ட பயனாளிகளுக்கு விநியோகிக்கப்படவுள்ளதாக யாழ்.செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ்.மாவட்டத்தில் உள்ள அனைத்துப் பிரதேச செயலர் பிரிவுகள், பிரதேச சபைகள் ஆகியவற்றில் இந்த இரு திட்டங்களும் உலக உணவுத் திட்டத்தின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வந்தன. இவற்றுக்குத் தகுதியான பயனாளிகளுக்கான பொருள்கள் தற்போது யாழ்.செயலகத்தால் வழங்கப்பட்டுள்ளன.

இவற்றுக்கான வழங்கற் கட்டளைகள் சகல பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (அ-8)

## நீரிழிவு நோயாளருக்கு குரக்கன் விநியோகம்

யாழ்ப்பாணம்,பெப்.25

நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கான உணவுத் தேவைக்கென கப்பல் மூலம் குரக்கன் எடுத்துவரப்பட்டுள்ளது.

ப.நோ.கூட்டுறவுச்சங்கங்கள் ஊடாக நோயாளர்களுக்கு குரக்கன் விநியோகம் செய்யப்படவுள்ளது. விரைவில் இவற்றை விநியோகிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் உதயனுக்குத் தெரிவித்தன. (1-203)

## ஆங்கிலப் பாடநெறிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம்,பெப்.25

தேசிய கல்வி நிறுவகத்தில் ஆங்கிலப் பாடநெறிகளைப் பயில்வதற்குத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணபங்கள் கோரப்பட்டுள்ளன.

பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியர்கள், ஆங்கில மொழி மூலப் பட்டதாரிகள், ஒரு பாடத்தை ஆங்கில மொழிமூலம் பயின்ற பட்டதாரி ஆசிரியர்கள் ஆகியோர் எதிர்வரும் 28ஆம் திகதிக்கு முன்னர் மேற்படி பாடநெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலதிக விவரங்களுக்கு வலயக் கல்விப் பணிமனைகளுடன் தொடர்பு கொள்ளலாம். (1-202-88)

## இந்து குருமாருக்கு அடையாள அட்டைகள்

யாழ்ப்பாணம்,பெப்.25

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் இந்து மத குருமாருக்கு வழங்கப்படும் அடையாள அட்டைகளில் ஒரு தொகுதி கிடைக்கப்பெற்றுள்ளது.

அவை எதிர்வரும் புதன் கிழமை முற்பகல் 10மணிக்கு நல்லூர் ஆலய முன்றிலிலுள்ள நாவலர் மணிமண்டபத்தில் வைத்து வழங்கப்படும்.

அடையாள அட்டைகளுக்கு விண்ணப்பித்தோர் நேரில் வந்து பெற்றுக்கொள்ளுமாறு இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வலிகாமம் அபிவிருத்தி உதவியாளர் கேட்டுள்ளார். (1-79)

## நிதி முகாமைத்துவ வழிகாட்டல் விரிவுரை

யாழ்ப்பாணம்,பெப்.25

யாழ். உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் எச்.என்.டி.ஏ. கற்கை நெறி பயில்வோருக்கான நிதிமுகாமைத்துவ பாட வழிகாட்டல் விரிவுரை எதிர்வரும் செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு நிறுவனத்தில் இடம்பெறும் என நிறுவனப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (1-202)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதிமன்ற உத்தரவை $1\frac{1}{2}$ வருடமாக செயற்படுத்தாத கிராம சேவையாளர்

## எச்சரித்து அறிவுறுத்தப்பட்டார்

யாழ்ப்பாணம்,பெப்.25

நீதிமன்றத்தின் பணிப்புரையை நிறைவேற்றாத கிராமசேவையாளர் ஒருவர் நீதிபதியால் எச்சரிக்கப்பட்டு அறிவுறுத்தப்பட்டார்.

வலி.தெற்குப் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த நபர் ஒருவர் பருத்தித்துறை நீதிமன்றத்தின் அழைப்பாணையை ஒப்படைக்குமாறு, அதே பிரிவைச் சேர்ந்த கிராமசேவையாளர் ஒருவருக்கும் பணிப்புரை விடுக்கப்பட்டிருந்தது.

கடந்த ஒன்றரை வருட காலமாக அந்த அழைப்பாணை தொடர்பாக பிரஸ்தாப கிராம சேவையாளர் நீதிமன்றுக்கு அறிக்கை எதனையும் சமர்ப்பிக்கவில்லை.

இதனையடுத்து, யாழ். அரச அதிபர் மூலம் பிரஸ்தாப கிராம சேவையளரை நீதிமன்றில் ஆஜராகுமாறு பருத்தித்துறை நீதிபதி உத்தரவிட்டிருந்தார்.

அதற்கிணங்க பதவிநிலை அதிகாரி ஒருவர் மூலம் சம்பந்தப்பட்ட கிராம சேவையாளர் நீதிமன்றில் ஆஜரானார்.

மக்களின் குறைகளைத் தீர்க்கும் பொறுப்புள்ள உத்தியோகத்தர் பொறுப்பாக நடக்க வேண்டும் என்று எச்சரித்த நீதிபதி, கிராமசேவையாளர்கள் நீதிமன்றத்துக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் அறிவுறுத்தினார். (அ-1)

# யாழ்.வைத்தியசாலைக்கு சேலைன்கள் உடன் அனுப்ப சிறிகாந்தா கோரிக்கை

## சுகாதார அமைச்சருக்கு அவர் அவசர கடிதம்

கொழும்பு, பெப்.25

யாழ். போதனா வைத்தியசாலைக்குத் தேவையான சேலைன் வகைகளை உடனடியாக அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கும்படி யாழ். மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் என்.சிறிகாந்தா கோரிக்கை விடுத்துள்ளார். இது தொடர்பாக அவர் சுகாதார அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவுக்கு அவசர கடிதம் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் நிலவும் யுத்த நடவடிக்கைகள் காரணமாகவும் மற்றும் விபத்துகள், கடுமையான நோய் காரணமாகவும் பாதிக்கப்பட்டிருப்பவர்களுக்கு உடனடியாக வழங்கப்படவேண்டிய சேலைன் வகைக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அநேகமாக மேற்கொள்ளப்பட வேண்டிய சத்திர சிகிச்சைகளும் பின்போடப்பட்டுள்ளன. இதனால் உயிராபத்துகளும் ஏற்படும் நிலை தோன்றியுள்ளது.

எனவே, மேலும் காலம் தாழ்த்தாமல் யாழ். போதனா வைத்தியசாலைக்குத் தேவையான சேலைன் வகைகளை உடனடியாக அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கும்படி நாடாளுமன்ற உறுப்பினர் சிறிகாந்த சுகாதார அமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

## வவுனியாவில் இளைஞனின் சடலம் மீட்பு

வவுனியா,பெப்.25

வவுனியாவில் நெழுக்குளம், குளுமாட்டுச் சந்தி, ஊர்மிலாத்தோட்டப் பகுதியில் வெட்டுக்காயங்களுடன் இளைஞன் ஒருவரின் சடலம் நேற்றுக்காலை மீட்கப்பட்டுள்ளது.

25வயது மதிக்கத்தக்க இந்த இளைஞனின் சடலம் நேற்று மாலை வரையும் அடையாளம் காணப்படவில்லை.

சடலம் வவுனியா ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளது. (1)

# இடம்பெயர்ந்த மக்களுக்கான ஜனவரி நிவாரண விநியோகம் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,பெப்.25

குடாநாட்டில் இடம்பெயர்ந்தவர்கள் மற்றும் சமுர்த்தி நிவாரணம் பெறுபவர்களுக்கான ஜனவரி மாத நிவாரணத்தை நேற்று பட்டியல் மூலம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக யாழ்.செயலக புனர்வாழ்வுப் பிரிவு தெரிவித்தது.

இந்த விநியோகத்துக்கான பொருள்கள் ப.நோ.கூ.சங்கங்களுக்கு வழங்கப்பட்டுவிட்டன.

இம்முறை அரிசி, சீனி, பருப்பு ஆகியவற்றுடன் கோதுமை மாவும் நிவாரணமாக வழங்கப்படவிருக்கின்றன.

நிவாரணம் வழங்குவதற்கான முத்திரைகள் வந்து சேராததால், பட்டியல் மூலம் நிவாரணம் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (அ-1-203)

## குடாநாட்டில் பல இடங்களில் சோதனை

யாழ்ப்பாணம்,பெப்.25

கோண்டாவில், இணுவில், தாவடி மற்றும் தெல்லிப்பழை, மல்லாகம் பகுதிகளில் நேற்றுப் படையினரின் சுற்றிவளைப்புத் தேடுதல்கள் இடம்பெற்றன.

நேற்றுக் காலை 6.30 மணி தொடக்கம் வீடு வீடாகத் தேடுதல் நடத்திய படையினர் இளம் வயதினரின் அடையாள அட்டைகளை தீவிரமாக பரிசோதனை செய்தனர். இந்தச் சோதனை நடவடிக்கை முற்பகல் 10மணி வரை இடம்பெற்றது. (1-68)

### ஆஸ்திரேலியாவுக்கு படகில் சென்ற இலங்கையர்கள்

# தஞ்சம் கோரிச் சென்றவர்களை தடுத்து வைப்பதற்குக் கண்டனம்

கைதுசெய்யப்பட்டிருக்கும்85இலங்கையர்களையும் கிறிஸ்மஸ் தீவில் அல்லது நவ்று தீவில் தடுத்துவைப்பது அவர்கள் வெளித்தொடர்புகளைச் சுதந்திரமாகப் பேணும் உரிமையைத் தடுப்பதாகும். இது கண்டனத்துக்குரியதாகும். ஆஸ்திரேலியாவின் அகதிகள் மற்றும் குடியேற்றம் தொடர்பான சட்டநிறுவனத்தின் இணைப்பாளர் டேவிற்மான் இவ்வாறு தெரிவித்தார்.

இதேவேளை-

ஆஸ்திரேலியாவில் அரசியல் தஞ்சம் கோரும் நோக்குடன் சட்டவிரோதமாக படகில் அந்நாட்டிற்குச் சென்றவேளை வழியில் கைது செய்யப்பட்டிருக்கும் இலங்கையர்கள் 85 பேரும் ஆஸ்திரேலியாவின் பெருநிலப்பரப்பினுள் அனுமதிக்கப்படமாட்டார்கள் என்று அந்நாட்டுப் பிரதமர் ஜோன் ஹோவார்ட் தெரிவித்திருக்கிறார்.

ஆஸ்திரேலியாவின் சமஷ்டிக் கட்சி அரசு, அரசியல்தஞ்சம் கோருவோரை, ஆஸ்திரேலியாவின் கிறிஸ்மஸ்தீவு அல்லது நவ்று தீவில் தடுத்துவைக்கும் நடை முறையே இவர்கள் விடயத்திலும் பின் பற்றப்படும் என்று தெரிவித்திருக்கிறது.

மரக்கலம் ஒன்றில் பயணம்செய்த 85 இலங்கையர்களையும், இந்தோனேசிய நாட்டவர்கள் இருவரையும் ஆஸ்திரேலியாவின் எல்லைக் காவல் படையினர் கைதுசெய்து கடற்படைக் கப்பல் ஒன்றில் தடுத்து வைத்திருந்தனர்.

அரசியல் தஞ்சம் கோரியுள்ள இவர் கள் ஆஸ்திரேலியாவின் பெருநிலப் பரப்பினுள் அனுமதிக்கப்படமாட்டார்கள் என்று அந் நாட்டுப் பிரதமர் ஜோன் ஹோவார்ட் தெரிவித்திருக்கிறார்.

''இவர்களை நவ்று தீவுக்கு அனுப்புவதுதான் தெளிவான ஒரேவழி. எனினும், ஏனைய வழிகள் குறித்தும் நாங்கள் பரிசீலிக்கின்றோம். எங்களுக்கு மேலும் விவரங்கள் தேவைப்படுகின்றன. ஆனால் இவர்கள் ஒருபோதும் பெருநிலப்பரப்பினுள் அனுமதிக்கப்படமாட்டார்கள் என்பது நிச்சயம்'' - என்று பிரதமர் ஜோன் ஹோவார்ட் மேலும் தெரிவித்திருக்கிறார்.

# கடத்தல், காணாமற்போனோர் எண்ணிக்கை ஜனவரியில் 201

யாழ்ப்பாணம்,பெப்.25

கடந்த ஜனவரி மாதத்தில் மட்டும் ஆள்கள் காணாமல் போதல், கடத்தல் தொடர்பாக மொத்தம் 201 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டிருப்பதாக இலங்கை மனித உரிமை ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை, யாழ்.குடாநாட்டில் கடந்த ஜனவரி மாதத்தில் 37பேர் காணாமற் போனதாகப் புள்ளிவிவரங்கள் தெரிவிக் கின்றன.

இலங்கையில் ஆள்கள் காணாமல் போதல், கடத்தப்படுதல் போன்ற சம்பவங்கள் நாளாந்தம் அதிகரித்து வருவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளதாக மனித உரிமை ஆணைக்குழுவின் மேலதிக செயலாளர் தெரிவித்தார்.

மேற்படி இரண்டு மனித உரிமை மீறல்கள் தொடர்பாகவும் கடந்த இரண்டு வருடகாலப் பகுதியில் 2600இற்கும் அதிகமான முறைப்பாடுகள் பதிவுசெய்யப்பட்டதாகவும் மேலும் கூறப்பட்டது.

நாட்டின் ஆள்கள் காணாமல் போதல் கடத்தல் போன்ற சம்பவங்கள் அதிகரித்து வருவது நாட்டில் வன்முறைகள் பெருகி வருவதையே புலப்படுத்துவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (4)

## இருவர் கடத்தல்; ஆணைக்குழுவில் முறைப்பாடு

யாழ்ப்பாணம்,பெப்.25

குடாநாட்டில் இளைஞர் இருவர் இனந்தெரியாத நபர்களால் கடத்திச்செல்லப்பட்டுள்ளனர் என்று யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவில் நேற்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

யமுனா வீதி, சட்டநாதர் கோவிலடியைச் சேர்ந்த கேசவன் ஜெயக்குமார் (வயது 25) என்பவரை நேற்று முன்தினம் இரவு 11.30 மணியளவில் அவரது வீட்டிற்கு வந்த இனந்தெரியாத நபர்கள் கடத்திச்சென்றதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதேவேளை, சுதுமலை வடக்கு, மானிப்பாயைச் சேர்ந்த ஐயாத்துரை இராதாகிருஷ்ணன் என்பவர் அவரது வீட்டில் வைத்து நேற்று அதிகாலை 1.15 மணியளவில் இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டதாக ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (அ-4)

# பயணிகள் கப்பலில் ஒவ்வொரு தடவையும் தபால் பொதிகளை எடுத்துவர ஏற்பாடு

யாழ்ப்பாணம், பெப்.25

திருமலைக்கும் காங்கேசன்துறைக்கும் இடையில் சேவையில் ஈடுபடும் 'கிறீன் ஓசன்' பயணிகள் கப்பல் மூலம், சாதாரண தபால்கள் எடுத்துவரப்படவிருக்கின்றன என்று வடபிராந்திய பிர தித் தபால் மா அதிபர் வி.குமரகுரு உதயனுக்குத் தெரிவித்தார்.

இக் கப்பல் திருமலையில் இருந்து வரும் ஒவ்வொரு முறையும் தபால் பொதிகளை எடுத்துவர ஏற்பாடு செய்யும்படி அத்தியாவசிய சேவைகள் பிரதி ஆணையாளர் எஸ். அன்னலிங்கத்திடம் கோரிக்கை விடுத்தோம். அவரின் ஏற்பாட்டில் இக்கப்பல் ஒவ்வொரு தடவையும் வரும்போது 250 கிலோ நிறையுடைய தபால் பொதிகளை எடுத்துவர அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்த ஏற்பாட்டின் பிரகாரம் இன்று வரும் கப்பலில் 23 தபால் பொதிகள் எடுத்து வரப்படுகின்றன என்று அவர் மேலும் தெரிவித்தார். (அ)

## ஹட்டனில் நேற்று 5தமிழ் இளைஞர் கைது

ஹட்டன் பிரதேசத்தில் நேற்று நடத்தப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையில் ஐந்து தமிழ் இளைஞர்கள் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டிருப்பதாக ஹட்டன் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வாழைச்சேனையைச் சேர்ந்த குறித்த இளைஞர்கள் ஐவரும் ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கான ஆவணம் தம்வசம் இல்லாத நிலையிலேயே கைது செய்யப்பட்டனர் என்று மேலும் தெரிவிக்கப்படுகிறது. (அ-4)

## மீனவருக்கு புதிதாக விசேட அ.அட்டை

நாட்டின் கடற்பிரதேச பாதுகாப்பையும் மீனவர்களின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்திக் கொள்வதற்காக மீனவர்களுக்கு விசேட அடையாள அட்டைகள் விரைவில் வழங்கப்படவுள்ளதாக அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா தெரிவித்துள் ளார்.

நாட்டின் கடற்பகுதியில் ஏற்படுகின்ற அசாதாரண சம்பவங்களைக் கட்டுப்படுத்துவதற்காக மீனவர்களுக்கு வழங்கப்படுகின்ற விசேட அடையாள அட்டை அதிநவீன வசதிகளைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் சொன்னார். (அ-4)

## சர்வகட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதற்குப் பின் மீண்டும் சர்வகட்சி பிரதிநிதிகள் குழுக்கூட்டம் நடைபெறும் என அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

சர்வகட்சி பிரதிநிதிகள் குழு தயாரிக்கும் இனப்பிரச்சினை தீர்வுக்கான ஆலோசனை நகல் இன்னும் ஒரு சில வாரங்களில் அரசுக்கு சமர்ப்பிக்கப்படும் எனவும் அமைச்சர் சொன்னார். (அ-1)

## போர்நிறுத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போதும் இடமளிக்கமாட்டோம். - என்று கூறினார்.

வாகரையிலிருந்து இடம்பெயர்ந்த 16,000 மக்களும் இந்த வார இறுதிக்குள் மீளக்குடியமர்த்தப்பட்டுவிடுவர். மார்ச் மாத இறுதியில் வாகரையில் இடம்பெயர்ந்தவர் என்று கூறுவதற்கு ஒருவர் கூட இருக்கமாட்டார். எல்லோருமே மீளக்குடியமர்த்தப்படுவர். அவர்களுக்குரிய உட்கட்டுமானப் பணிகளுக்காக அரசாங்கம் பெருந்தொகைப் பணத்தை ஒதுக்கிச் செலவிட்டு வருகின்றது. - என்றும் அமைச்சர் ரம்புக்வெல தமது செவ்வியில் தெரிவித்தார்.(அ)


### விற்பனைக்கு

COMPAQ DESKPRO EN PIII Computer (17" flat Screen & ups), P4 Computer, புதிய CREATIVE 2.1 Woofer, Sony CD - R/RW, VGA 32MB, LCD 17" IBM Monitor

தொடர்பு: இல.180, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 0773316580

(58436)



### துயர் பகிர்கின்றோம்

எமது சக ஊழியர் ஜெ.மாறன் அவர்களின் அன்புத் தந்தை

**அமரர் சின்னையா ஜெயக்குமார்**



போனீரோ! போனீரோ!
பூவுலகை விட்டு - நீரும்
விண்ணுலகம் சென்றீரோ
அன்புடையோர் அலறியழ
அவனிவிட்டு சென்றீரோ
பாசமுடன் பெற்ற மக்கள், மனைவி
பரிதவித்து நிற்கையிலே
வானாளச் சென்றனையோ.

அமரர் அவர்களுக்கு எம் கண்ணீர் காணிக்கைகள் செலுத்தி அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

செலிங்கோ கிராமின் கிரடிற் கம்பனி லிமிட்டெட், யாழ்ப்பாணக் கிளை, நெல்லியடிக் கிளை.

செலிங்கோ கிராமின் விவசாய கடன் நிறுவனம், சுன்னாகக் கிளை.



### மரண அறிவித்தல்

**சின்னையா ஜெயக்குமார்**



கற்குழி, நுணாவில் கிழக்கு, சாவகச்சேரியை சொந்த இடமாகக் கொண்ட சின்னையா ஜெயக்குமார் நேற்று(24.02.2007)சனிக்கிழமை அகால மரணமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா மற்றும் இரத்தினம் தம்பதியரின் மகனும் நதிமலரின் அன்புக் கணவரும் மாறன் (செலிங்கோ கிராமின் கிரடிற் கம்பனி லிமிட்டெட், யாழ்ப்பாணம்), கஜேந்திரன் (HNB வங்கி ஊழியர், யாழ்ப்பாணம்), சர்மிளா (2008 A/L கலைப் பிரிவு, யா/மகளிர் கல்லூரி, சாவகச்சேரி) ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(25.02.2007)ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்துமயானத்தில் தகனஞ் செய்யப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நுணாவில் கிழக்கு,
கற்குழி, சாவகச்சேரி. (58438)

தகவல் :
மனைவி, பிள்ளைகள்.


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவ[illegible]361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25.02.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org